M. I. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 20 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

The "Nam Nadu" A Tamil Daily ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4 ... ஆனி 3உ சனி (16—6—56) ★ ★ வெளியூர்: ஆனி 4உ ஞாயிறு (17—6—56) [இதழ் 1

சீனாவின் மக்கள் தொகை 58,26,00,000

உலக மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கு!

வாஷிங்டன், ஜூன் 15—

1953-ம் ஆண்டின் மத்தியில் சீனாவின் மக்கள் தொகை 58,26,00,000 என்று அமெரிக்க, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நிலையம் அறிவித்துள்ளது. எனவே, சீனாவின் மக்கள் தொகை உலக மக்கள் தொகையில் சுமார் நான்கில் ஒரு பங்கு ஆகிறது!

து வேஷமும்-பகையும் மூட்டப்படுகிறதாம்!

அ துரோகத்திலும் அரசதுரோகமாம்

ந டின் முன்னேற்றம் நாசமடையுமாம்!

ரிய ஆட்சியே அதைத் தடுத்துள்ளதாம்!

ண்டிக்க வேண்டுமாம்! தக்கவாறு தண்டிக்க வேண்டுமாம்!

பினல் சட்டத்தில் அதற்கான விதி இருக்கிறதாம்

அதுபற்றி ஆட்சியினர் அலட்சியமாக இருக்கிறார்களாம்

இராஜகோபாலாச்சாரியார் அங்கலாய்க்கிறார்!

சென்னை, ஜூன் 16—

"பகையையும் துவேஷத்தையும் பிடிவாதமாகப் பரப்பி வருவது, இந்த நாட்டு மக்களின் நலத்திற்கு மாறுபட்டதாகும். சமூகப் பிரிவுகளுக்கிடையில் துவேஷத்தை உண்டாக்குவது தேசத்தை முன்னேற்றமடையச் செய்யாது நாம் பெரும் தேசியத் திட்டங்களையும், நம்பிக்கையையும் கொண்டிருக்கிறோம்.

—இவ்வாறு சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் சென்னை விவேகானந்தா கல்லூரியில், 'தேச முன்னேற்றத்தின் அடிப்படைகள்' என்ற பொருள்பற்றி பேசும் பொழுது எச்சரித்து இருக்கிறார். அவர் மேலும் கூறியுள்ளதாவது :—

"ஆனால், நாட்டின் இப்பகுதியில் நடைபெற்றுவரும் துவேஷத்தையும் பகையையும் மூட்டும் நடவடிக்கையானது பயங்கரமான குற்றமாகும்.

"இந்தியப் பினல் கோடு சட்டத்தில், எது அரசத் துரோகம் என்பதற்கு விளக்கம் தரப்பட்டு இருக்கிறது. இப்பொழுது நான் விளக்கமாக சுட்டிக்காட்டியுள்ள அரசத் துரோகத்தைக் காட்டிலும் வேறு பெரியதோர் அரசத் துரோகம் இருக்கவே முடியாது

"இந்த நடவடிக்கை நடந்து கொண்டு இருப்பது என்பது அவ்வளவு ஆச்சரியமானதல்ல; ஆட்சிப்பொறுப்பில் உள்ளவர்கள், இதைக் கண்டிக்காமலும், இதற்கு எதிராக எந்தவித நடவடிக்கையை எடுத்துக் கொள்ளாமலும் இருப்பதுதான் பேராச்சரியமாகும்.

"பகையையும் துவேஷத்தையும் மூட்டுவதை பெரியகுற்றமாகக் கொண்டு, அவ்வாறு பரப்பி வருவோர் மீது கடுமையான தண்டனைகளை அன்னிய அரசாங்கம் கூட அளித்திருக்கிறது; இது, இன்னும் விளக்கப்படவும் இல்லை.

"இப்பொழுதும், இக்குற்றம் வெளிப்படையாகச் செய்யப்பட்டு வருகிறது. முன்பாவது நயமான சொற்களால் மூடி மறைத்து அக்குற்றம் இழைக்கப்பட்டு வந்தது; ஆனால், இப்பொழுதோ, நயமான சொற்களால் மூடி மறைக்க வேண்டுமே என்றுகூடக் கருதப்படாமல் வெளிப்படையாகச் செய்யப்பட்டு வருகிறது.

"நாம் அனைவரும் இருந்துவந்த பிரிட்டிஷ் ஆட்சியிலும்கூட எது அபாயகரமானது எனக் கொள்ளப்பட்டுவந்திருக்கின்றதோ, அது நம்மைநாமே ஆண்டுவருகிற இந்த நேரத்தில் மேலும் அபாயகரமானதாகும். மிகுதியான அரசாங்க பலாத்காரத்தைக் கையாளாமல் நம் நாட்டில் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டி இருப்பதால், அந்த அபாயகரம் கூடுதலாகிறது.

"எனவே, அன்னிய ஆட்சியைப்போல் கடுமையான பலாத்காரத்தை நாம் கையாளுவது கூடாது என்பதினால், ஒரு குற்றம் (துவேஷப் பிரச்சாரம்) வெளிப்படையாகத் தெரிகிறவரையில் அன்னிய ஆட்சி பொறுமை காட்டிவந்ததுபோலவே, நாம் இப்பொழுது பொறுமை காட்டக்கூடாது.

"ஆதலாலே, சுதந்திரத்துடன் நம்மை நாமே ஆண்டுவருவதை நாம் ஒரு பொருட்டாகக் கொள்ளுவதானால், இந்தத் துவேஷப் பிரச்சாரத்தைத் தடுப்பது மிகப்பெரும் தேவையாக இருக்கிறது."

(முழு விவரம் அடுத்த இதழில் வெளிவரும்)

ரூ. 46 கோடி செலவழிக்கப்படுமாம்!

தென்னாட்டிற்கு எவ்வளவோ

கோரக்பூர், ஜூன் 14—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்கனவேயுள்ள தொழிற்சாலைகளை விரிவாக்குவதற்கும், புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கும் ரூ. 46 கோடி செலவழிக்கப்படுமென இந்திய இரயில்வே இலாகாவினர் எதிர்பார்க்கின்றனராம்.

ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்ய முடிவு?

சம்பளம் கொடுக்கப்படாததே காரணம்!

கோழிக்கோடு, ஜூன் 15—

கோழிக்கோட்டில் உள்ள ஓர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு நீண்ட காலமாக மாதச் சம்பளமும், பஞ்சப்படியும் கொடுக்கப்படவில்லையாம். அதனால் அவற்றை உடனடியாகக் கொடுக்கும் படியும், வருங்காலத்தில் மாதா மாதம் தவறாமல் சம்பளம் கொடுக்க உத்திரவாதம் அளிக்கும்படியும், இல்லையென்றால், ஜூன் 25-ந் தேதியிலிருந்து ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்யப் போவதாகவும் பள்ளி நிர்வாகிகளுக்கு ஆசிரியர்கள் 'நோட்டீஸ்' கொடுத்துள்ளதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

பீகாரில் 2,900 சதுர மைல் பரப்பளவு பகுதி

மேற்கு வங்கத்தைச் சேரும்

கல்கத்தா, ஜூன் 14—

மாநிலங்களைத் திருத்தியமைக்கும் திட்டத்தின்படி, பீகாரைச் சேர்ந்த சுமார் 2,900 சதுரமைல் பரப்புள்ள பகுதி மேற்கு வங்காளத்துடன் சேர்க்கப்பட்டுவிடும்.

இது சம்பந்தமான சட்ட மசோதா ஒன்று மத்திய அரசாங்கத்திடமிருந்து மேற்கு வங்க அரசாங்கத்திற்கு வந்துள்ளது.

மேற்கு வங்க சட்டசபையின் சிறப்புக் கூட்டம் ஒன்று விரைவில் நடைபெறும்; அப்போது இம்மசோதா பற்றிப் பரிசீலிக்கப்படும்.

'நீதியையும் அறத்தையும் நிலைநாட்டப் போர் தொடுப்பேன்'

சுந்தரலிங்கனார் சூளுரைக்கிறார்

தமிழ் மொழிக்குப் 'படுகுழி' வெட்டியதின் எதிரொலி

'ஐக்கிய இலங்கை' உருவாக இடமில்லையென்கிறார்

கொழும்பு, ஜூன் 15—

"என்னுடைய பணி யெல்லாம் இனி வெளியிலேதான்; வெளியில் இருந்து கொண்டே நீதியையும், அறத்தையும் நிலைநாட்டப் போர் தொடுப்பேன்; நீங்கள் ஓர் ஐக்கிய இலங்கையை உருவாக்க விழைகின்றீர்கள்; ஆனால், நீங்கள் ஒரு பிரிக்கப்பட்ட இலங்கையைத்தான் பெறப் போகிறீர்கள்",

என்று, இலங்கைவாழ் தமிழர் எதிர்ப்பு முன்னணியைச் சேர்ந்தவரும் பழைய மந்திரி சபையில் வாணிப மந்திரியாகப் பணியாற்றியவருமான திரு. சி. சுந்தரலிங்கம் அவர்கள் இலங்கைப் பிரதிநிதிகள் சபையில், உணர்ச்சியால் உந்தப்பட்டுக் கூறினார்.

இலங்கைப் பிரதிநிதிகள் சபை இன்று 14 மணி நேர விவாதத்திற்குப் பின்னர், 'சிங்களமொழி மாத்திரம்தான் அரசாங்க மொழியாக இருக்கும்', என்ற அரசாங்கத்தின் மசோதாவை நிறைவேற்றியதை யொட்டியே திரு சி. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இனித்தாம் சட்டசபையின் வருங்கால நடவடிக்கைகளில் பங்குகொள்ளப் போவதில்லை என்றும் அவர் சொல்லிவிட்டார்

மசோதாவை ஆதரித்து 66 உறுப்பினர்களும், எதிர்த்து 29 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

1960-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாளிலிருந்து—அதாவது, 1961-ம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து சிங்களமொழிமாத்திரமே எல்லாத் துறைகளிலும் அரசாங்க மொழியாக இலங்கும். எனவே, 'தமிழ் மொழியும் அரசாங்க மொழியாக இருக்க வேண்டும்' என்ற கோரிக்கைக்குழுத் தப்புள்ளி வைத்தாகி விட்டது எனலாம்.

தமிழர் காங்கிரசைச் சேர்ந்தவரும், பழைய மந்திரி சபையில் மந்திரியாக இருந்தவருமான பொன்னம்பலம் அவர்கள், ... பேசும் பகுதிகளின் பிர... இப்போது, சபையின் ... நடவடிக்கைகளில் தொடர்ந்து பங்கு கொண்டு, ... தமிழ் மொழியையும், தமிழர் ... பாட்டையும் உருத்தெரியாமல் ஆக்கக் கூடிய இந்த மசோதாவை நடைமுறைக்குக் கொண்டுவருவதை எதிர்ப்பதற்கான நடவடிக்கைகள் பற்றி முடிவு செய்வதா என்பதைத் தன்மானமுள்ள தமிழர்கள் என்ற முறையில் நன்கு சிந்தித்து முடிவு கட்டுதல் வேண்டும்' என்று கூறியதாகத் தெரிகிறது.

மசோதாவை இறுதியாகப் படித்தபோது பொன்னம்பலம் அவர்கள், மசோதாவை இன்று முதல் 1000 ஆண்டுக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டுமென... இந்த மசோதாவின் மீது இல... வாழ் தமிழர்க்குள்ள வெறு... யும் பகைமையையும் உலகத்... குப் புலப்படுத்தும் வகையில் ... செய்யும் நோக்கத்துடனேயே ... தனிப்பட்ட திருத்தத்தைத் ... கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

மசோதாவை எதிர்த்தவர்கள் உருதுவும், வங்காளமும் ஆகிய இரு மொழிகளும் பாகிஸ்தானில் அரசாங்க மொழிகளாக்கப்பட்டிருப்பதையும், இந்தியாவில் இந்தி மத்திய அரசாங்க மொழியாக இருப்பினும், வட்டார மொழிகளும் அதோடு சம தகுதி பெற்றவைகளாக இருக்கின்றன என்றும் சுட்டிக் காட்டினர்.

'மகாராஷ்டிரர்கள், பம்பாய் நகரம் மகாராஷ்டிரத்தோடு...

(1-ம் ஒளம் பார்க்க)

தோழர்களுக்கு:

'நம் நாடு' இதழ் நான்காம் ஆண்டு துவக்க விழாவினையொட்டி வெளியிடப்பெற்ற மலரில், இடமின்மையின் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த — தோழர்கள் கி. மனோகரன், தமிழ்ப் பித்தன், கோ. வெற்றிவீரன் ஆகியவர்களின் கட்டுரைகள் இன்றைய இதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[குறிப்பு: தோழர் கி. மனோகரன் அவர்களின் 'மக்களாட்சி மலருமா?' என்ற கட்டுரையின் முற்பகுதி, மலரில்வெளிவந்துள்ளது; பிற்பகுதி இன்றைய இதழில் தரப்பட்டுள்ளது.—ஆ-ர்.]

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

இணைந்திருக்க வேண்டுமென்று கூறுவது போன்றதுதான்—சிங்கள மொழிமாத்திரம் அரசாங்க மொழியாக இலங்கையில் திகழ வேண்டுமென்று சிங்களவர்கள் கூறுவதாகும்' என்று உணவு விவசாய மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன் என்பவர் குறிப்பிட்டார்.

பெடரல் கட்சியின் தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் இம்மசோதா தமிழ் பேசும் மக்களை அரசியலில் தீண்டாதவர்களாக ஆக்கிவிடும் என்பதாலேயே தமது கட்சி இம்மசோதாவை எதிர்க்கிறது என்று குறிப்பிட்டார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 16—6—'56 சனி

அது மட்டும் போதாது!

"இரண்டு ஆட்டோ-ரிக்ஷா ஓட்டிகளும், 11 வாடகை மோட்டார் ஓட்டிகளும் பெற்றிருந்த 'ஓட்டும் உரிமை' இரண்டு திங்களுக்குப் பறிக்கப்பட்டுவிட்டது."

"மேற்படி ஓட்டிகள் ஓய்வாக இருந்த நேரத்தில், வாடகைக்கு வண்டியை கோரப்பட்டபோழுது, ஓட்ட மறுத்ததே தண்டனைக்குரிய காரணம்"

"இரண்டு ஆட்டோ-ரிக்ஷா ஓட்டிகளும், ஆறு வாடகை மோட்டார் ஓட்டிகளும், இரண்டு திங்களுக்கு தொழில் செய்வதிலிருந்துத் தடுக்கப்பட்டுள்ளனர்."

"அவ்வாகனங்களில் உள்ள தொலைவு—தொகை காட்டும் கருவியின் குறிப்புப்படி நடக்க மறுத்து, தங்கள் விருப்பப்படி கட்டணம் கேட்டது அவர்கள் செய்த குற்றம்"

"வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் மக்களிடம் மரியாதையின்றியும் முரட்டுத்தனமாகவும் நடந்துகொண்டதற்காக ஒரு ஆட்டோ-ரிக்ஷா ஓட்டியும், எட்டு மோட்டார் ஓட்டிகளும், வாகனங்களை 'ஓட்டும் உரிமை'யை மூன்று மாதங்களுக்கு இழந்துள்ளனர்"

"விரைவாகவும் பொறுப்பற்றப் போக்கிலும் மோட்டாரை ஓட்டிய குற்றத்திற்காக ஒருவர், மூன்று திங்களுக்கு பணிபுரியும அரசாங்க அனுமதியை இழந்து இருக்கிறார்."

இப்படித் தகவல் தரப்பட்டிருக்கிறது.

வாடகை மோட்டார் வாகனங்களைச் செலுத்துவது, பொதுமக்களுக்குரிய போக்குவரத்து வசதியை நடுசெய்வது என்ற ஒன்றுடன் முடிந்துவிடுவதன்று. அவ்வாகன உரிமையாளர்களின் தொழில் பிரச்சினையும் அதில் அடங்கியிருக்கிறது.

அதுவுமன்றி, வாடகை மோட்டார் வாகன விவகாரத்தில், வாகனத்திற்கு ஆயிரக் கணக்கில் முதலீடு போட்டவர்—பொதுமக்கள் ஆகிய இரு சாரார் மட்டுமே தொடர்பு கொண்டிருக்கவில்லை.

திங்கள் சம்பளத்திற்கோ—தினக் கூலிக்கோ பணிபுரியும் வாகன ஓட்டியும், மேற்குறிப்பிட்ட இருவருக்கும் இடையில் இருந்துவருகிறார். பெரும்பான்மையான வாடகைமோட்டார்வாகனவிஷயத்தில்இதுவே பொதுவான ஏற்பாடாகும்.

வாகன சொந்தக்காரர்களுக்கு இலாபந் தேடித் தருவதுடன், தாங்களும் ஏதாவது தேடிக்கொள்ள வேண்டும் என்ற கருத்தில், வாகனங்களை வாடகைக்குக் கோரும் பொதுமக்களை இந்த வாகன ஓட்டிகள் வருத்த முன்வருகின்றனர்.

வாகனங்களை வாடகைக்குக் கோரும் நபரின் நெருக்கடியான தேவையை, இந்த டிரைவர்கள், தங்களுடைய 'பண ஆசை'க்குச் சாதகமாக்கிக் கொள்ள முயலுகின்றனர். பெரும்பாலும், இந்த முறையற்ற முயற்சியில் அவர்கள் வெற்றியும் பெற்றுவிடுகின்றனர்.

அதிகப் பணவசதி உடையவர்கள்தான் பெரிய வாடகை மோட்டார்களை அமர்த்திக் கொள்ளுகின்றனர்.

சிறிய மோட்டார் வாகனங்களை அமர்த்திக்கொள்ள முன்வருகிறவர்கள் பெரிதும் நடுத்தர மக்களேயாவர். அவர்கள் தான், இன்று, இத்துறையில் அதிகத் தொல்லைக்குள்ளாகி வருகிறார்கள்.

ஆட்டோ—ரிக்ஷாவில் தொலைவு காட்டும் கருவி மட்டும்தான் பொருத்தப்பட்டு இருக்கிறது. வாடகைமோட்டார் வாகனங்களில் அமைத்து இருப்பது போன்று தொலைவு-தொகை காட்டும் கருவி அமைக்கப்பட்டு இருக்கவில்லை. இந்தக் குறைபாடு களையப்பட வேண்டிய ஒன்றாகும்.

தொலைவு—தொகை காட்டும் கருவியின் கணிப்புப்படி நடக்கக் கடமைப்பட்டிருக்கின்ற வாடகை மோட்டார் ஓட்டிகள், ஏன் அதன்படி நடந்து கொள்ள மறுக்கிறார்கள் என்பது சிந்திக்கத்தக்கது.

மக்கள் சஞ்சாரம் மிகுதியாக உள்ள இடங்களுக்குச் செல்லவேண்டும் எனக் கோரும்பொழுது, வாடகை மோட்டார் ஓட்டிகள், வாகனங்களைச் செலுத்த எப்பொழுதும் மறுப்பதே கிடையாது. மக்கள் புழக்கம் குறைந்துள்ள பகுதிகளுக்குச் செல்லக் கோரும் பொழுதுதான், கருவியின் கட்டணக் கணிப்புக்கு உடன்பட்டு வாகனத்தைச் செலுத்த முடியாது என வாகன ஓட்டிகள் பிடிவாதம் பேசுகிறார்கள். குறிப்பிட்ட இடத்திற்குத் திரும்பும் பொழுது, புதிய வாடகைக் கிடைக்கப்பெறாது, வீணுக்குத் திரும்பி வரவேண்டுமே என தங்கள் பிடிவாதத்திற்குக் காரணம் காட்டுகிறார்கள்.

அந்தக் காரணம் நியாயமானதாக இருந்தாலும் இருக்கக்கூடும். அது நியாயமான காரணம் என்பதற்காக, வாகனங்களை வாடகைக்குக் கோரும்போது மக்கள் ஏமாற்றத்திற்கும், அதிகப் பணச் செலவிற்கும் ஆளாகத்தான் வேண்டுமா என்பது ஆராயத்தக்கது.

குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று திரும்பும் பயணத்தில் பிரயாணிகள் கிடைப்பது அரிதிலும் அரிது என்றக் காரணத்தைக் காட்டியே, கருவியின் கட்டண கணிப்புக்கு உடன்பட மறுத்து, பிரயாணத் தொகையை நிர்ணயிப்பதில் பேரம் பேசும் பழக்கத்தை மேற்கொள்ளுகிறார்கள் வாடகை வாகன ஓட்டிகள். வாகன ஓட்டிகளின் இந்தச் சங்கடமான வற்புறுத்தலுக்கு, தங்கள் தேவையின் முக்கியத்துவத்திற்குத் தவிர்க்க முடியாத நிலையில் கட்டுப்பட்டு, பிரயாணிகளும் அதிகமான தொகையைக் கொடுத்துத் தீரவேண்டிய நிலைக்கு ஆளாகிறார்கள்.

இதற்குப் பரிகாரத்தைத் தேடுவதில் போக்குவரத்துப் பாதுகாப்புத்துறை முனைந்திருக்கிறது. அந்த முயற்சி பாராட்டத்தக்கதேயாகும் என்றாலும், அதனால் மட்டுமே நிலைமை சீராகிவிடும் என்ற முடிவுகட்ட முடியாது.

அரசாங்க விதி காப்பாற்றப்படுகிறது என்ற அளவில் திருப்தி கொள்வதைத் தவிர, பாதுகாப்புத் துறையினர் மேற்கொண்டுள்ள பரிகார முறையினால், எதிர்பார்க்கின்ற நலனை—வசதியை பொதுமக்கள் பெற்று மகிழ முடியாது.

அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அதுவே ஒப்ப முடிந்த வழியாகும்.

வாடகை மோட்டார் வாகன ஓட்டிகளுக்கு, பிரயாணிகளைத் தேடி அலைய வேண்டிய கட்டாயத்தை உண்டாக்கவேண்டும். அப்பொழுது தான் இந்த முறையற்ற போக்கிற்கு முடிவு ஏற்படும்.

வாடகைக்கு விடப்பட்டு வரும் சிறிய மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கையை இருமடங்கு மும்மடங்காகப் பெருக்க வேண்டும். அந்தப் பெருக்கத்தில்தான் நிலவியுள்ள ஒழுங்கற்ற நிலைமைக்கு உரித்தான பரிகாரம் அடங்கி இருக்கிறது.

எனவே, இனியாவது தண்டனை தருவதை மட்டுமே ஒரு சீர்படுத்தும் முறையாகக் கொள்ளுவதை கைவிட்டு, தக்க முறையை மேற்கொள்ள வேண்டும் என்று கோருகிறோம்.

மக்களாட்சி மலருமா?

கி. மனோகரன், B.A. (Hons.)

பொதுமக்கள் கருத்தை மதித்து நடத்தல், ஆட்சிக் குழுத் தலைவரிடம் முழு அதிகாரத்தையும் ஒப்படையாதிருத்தல், பலம் பொருந்திய எதிர்க்கட்சி செயல்படல், எதிர்க்கட்சியினர் குறிப்பிடும நல்லவைகளை ஏற்று அல்லவைகளைத் தள்ளும் பண்பு பெறல், சம உரிமையைக் காக்கும் உணர்வுகொள்ளல் ஆகிய நிலைமைகள் மக்களாட்சி மலர்ந்து மணம் வீசுவதற்கு இன்றியமையாத் தேவைகளாகும் என்பதை விளக்கிவிட்டு, மேலும் இருந்து தீரவேண்டிய நிலைமைகளைச் சுட்டிக்காட்டி, அந்த நிலைமைகள் எந்த அளவு இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்துவருகின்றன என்பதைத் தெளிவாக ஆராய்ந்து அறிவித்துள்ளார், ஆசிரியர்.

இந்தியத் அரசியல் சட்டம், காங்கிரஸ் ஆட்சியாளர் மனப்போக்கு, மக்களாட்சி மலர்வதற்கு எந்த அளவு துணை செய்யத் தக்கவை என்பதை ஆசிரியர் வரையறுத்து எழுதியுள்ளார்.

தனிநபர் சுதந்திரம், ஆட்சிக் குழுவினர் உருவாக்கும் சட்டங்களின் மூலம் பாதுகாப்புக்குரியனவாக்கப்படுதல் வேண்டும். ஆட்சிக் குழுவினர் உருவாக்கும் கொள்கைகளில், வகுக்கின்ற பொதுப்படை எல்லாத் திட்டங்களிலும், தனிநபர் தனித்தன்மை ஒளிவிட வேண்டும். தனித்தன்மைக்கு (Individuality) உயரிய இடம் கிடைத்தாக வேண்டும். அதன் பொருள், தனிமனிதனின் கருத்துக்களின் வற்புறுத்தல் அல்ல—என்றுதான் தெரியுமே!

ஜனநாயகத்திலே எல்லோர் உளத்தையும் தொடும் உரிமை வாக்குரிமையாகும். வயது வந்தோர் அனைவருக்கும் (ஆண், பெண் உட்பட) வழங்கப்படும் அந்த உரிமையின் மூலம், பிரஜைகள், தம்மை ஆட்சியோடு இணைத்துக்கொள்ளுகிறார்கள். தமக்கும்—ஆளுகின்ற அரசுக்கும் இடையே பொதுவாக மற்றைய ஆட்சி முறைகளில் இருக்கிற இடைவெளியைக் குறைத்து இல்லாமல் செய்கிறார்கள். மக்கள் தமக்குரிய பொறுப்பையும், கடமையையும் உணருகிறார்கள். (தேர்தல் காலத்திலே மட்டும்தான் இங்கே அந்தத் தொடர்பிருக்கிறது; தேர்தல் முடிந்தபின், மக்களுக்கும்—ஆட்சிக்கும்தான் தொடர்பிருப்பதில்லையே!)

மக்கள் ஆட்சிமுறையிலே தான், பத்திரிகைகளின் செல்வாக்கை—தேவையை நாம் உணர முடியும். மக்களின் அபிப்பிராயத்தை உருவாக்க, ஆட்சிக்குழுவினருக்கு, மக்களின் குறைபற்றி நேர்மையான எண்ணங்களைத் தெரிவிக்க, சென்று தீரவேண்டிய பாதையைச் சுட்டிக்காட்ட பத்திரிகைகள் செயல்பட வேண்டும். ஆட்சி பீடம் ஏறியோர் வகுக்கின்ற கொள்கைத் திட்டங்கள், வளர்ந்துவரும் ஜனநாயகப் பண்பாட்டைச் சிதைக்க முற்படின், அதை எதிர்த்துக் கனல் கக்கி ஆணவத்தைச் சுட்டெரித்தல் பத்திரிகைகளின் நீங்காக் கடமை. அந்தக் கடமையிலே, இந்தியத் துணைக் கண்டப் பத்திரிகைகள் எப்படிச் செயலாற்றுகின்றன என்பதை, 'இந்து', 'தினமணி', 'சுதேசமித்திரன்', 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகைகளைப் படிப்போர் நன்கறிவர். நேர்மை வழி நின்று ஜனநாயகத் தட்ப-வெட்ப நிலையை வளர்க்க விரும்புகின்ற பத்திரிகைகளை ஆட்சியாளர்கள் அணுகுகின்ற முறையை, பத்திரிகை சுதந்திரத்தைக் கழுத்தறுக்கும் மசோதா மக்கள் சபையிலே நிறைவேற்றப்பட்ட சட்டம் உரத்த குரலிலே பேசிக்கொண்டிருக்கிறதே!

மக்களாட்சி முறைக்கு—அதன் அரசியல் வெற்றிக்கு அமர காவியம் தீட்ட விழைவோர், அந்த நாட்டுக்கென்று எழுதிக் கொள்ளும் சட்டத்தில் அதற்கானவை செய்துகொள்ளுகிறார்கள். சட்டத்தில், உள்ளத்தைத் தொட்டிழுக்கும் பளபளப்பான வனப்புள்ள கருத்துக்கள் மட்டும் இருந்து பயனில்லை. அதைத் தூய்மையான உள்ளத்தோடு செயலாற்றுவதிலேதான் வெற்றியிருக்கிறது. எதேச்சாதிகாரிகளின் ஆணவ உலைக்கூடத்தினின்று புறப்பட்ட சட்டமெனும் கொடுவாள்கள், மக்களைத் தீண்டாமல், அவர்களுக்குப் பலனீட்டும் முயற்சியிலே ஈடுபட்ட நிலைமைகளை வரலாறு பறைசாற்றுமலுமில்லை.

இந்தியத் துணைக்கண்டத்தின் ஆட்சியாளர்கள் உருவாக்கிய சட்டங்கள், எப்படி மக்களாட்சியை காப்பாற்றுகிறதென்பதை தினந் தினம் நொந்து, வேதனையைச் சுவைத்துக் கொண்டிருக்கிற மக்கள் அறிவார்கள். குறிப்பாக, அதிலே வரும் 'ராஷ்டிரபதி'யின் விசேட அதிகாரங்கள் (Emergency Powers) இங்கே நமது கவனத்திற்குரியதாகும். இந்தச் சட்டத்தில், 9 ஷரத்து'க்கள் அடங்கியுள்ளன. 352-வது பிரிவிலிருந்து 360 ஈறாக உள்ளவை, ஒரு எதேச்சாதிகாரியை உருவாக்கி, நம்முன்னே நிறுத்துகிறது.

இந்த அதிகாரங்களை மூன்று வகையாகப் பிரித்திருக்கிறார்கள்:—

(1) வெளிநாட்டுப் படையெடுப்பு, உள்நாட்டுக் குழப்பம் இவைகள் காரணமாக (Internal Disturbance and External Aggression) அமைதி கெடுமாயின், விசேட அதிகாரத்தின் மூலம் ராஷ்டிரபதி, ஜனநாயகத்தைக் கழுத்தறுக்கலாம்.

(2) ஆட்சியின் அ[illegible]ச்சு முறிந்து, அந்தந்த மாநிலங்க[illegible]ரின் ஆட்சி முறை, சட்டத்தில் [illegible] வகுத்துள்ள 'ஷரத்து'களின்ப[illegible] சுமுகமாக நடக்காது என்[illegible] ராஷ்டிரபதி நினைத்தால் பே[illegible] சன் [illegible]க்களாட்சி மரணத்தை மு[illegible] வேண்டும்!

(3) பொருளா[illegible] [illegible]ருக்கடி—இங்கே ஆரம்ப 'ஷ[illegible] [illegible]லே உள்ள வாசகங்களைச் சிந்[illegible] [illegible]—வெளிநாட்டு ஆக்கிரமி[illegible] அல்லது உள்நாட்டுக் [illegible]ப்பம் (Disturbance) [illegible] குறித்திருக்கிறது—அமெ[illegible] [illegible]ட்டத்திலும், விசேட அ[illegible] [illegible]ளைக் குறிக்கும் 'ஷரத்து'[illegible] அங்கே வெளிநாட்டு [illegible]ப்பு அல்லது—உள்நாட்டு [illegible] (Rebellion) என்[illegible] ருக்கிறார்கள்.

இந்தியச் சட்டத்[illegible]
அமெரிக்கச் ச[illegible]
புரட்சி! குழப்ப[illegible]கம்,
டம—அதன் இ[illegible]
இறுதிக் கட்டத்[illegible]
அதிகாரம் அங்[illegible]
கிறது—இங்கே ஆ[illegible]பக்கட்டத்திலேயே!

ஜனநாயகக் கழுத்தறுப்பு
இங்கே உடனடி ஆரம்பத்திலேயே-குழப்பத்தின் பேரால்!
அங்கே கடைசி நேரத்தில்—
தவிர்க்க முடியாத சூழ்நிலையில் வேதனையோடு!

விரிவஞ்சி இந்த ஆராய்ச்சியை இத்துடன் முடித்துக் கொள்வோம்.

1 ஜனநாயகத்தை நிலைநாட்ட மக்களுக்குரிய கடமையை மறந்து விடக்கூடாது. பிரைஸ் பிரபு, இரண்டு தீமைகளைக் குறிப்பிட்டார்—ஒன்று, கவலையற்ற தன்மை (Indifference); இரண்டு—சோம்பேறித்தனம் (Indolence) இவை இரண்டையும் ஒழித்து, விழிப்புணர்ச்சி உள்ளவர்களாக மக்கள் இருக்கவேண்டும்.

2. தேவையான அளவு, தன்னை—தன் நாட்டை — கடமையை உணரும் கல்வி தேவை.

3. முற்போக்கான எண்ணங்களின் கூடாரமாக இதயங்கள் ஆக்கப்பட வேண்டும்.

4. பிரச்சினைகளை சுயமாக் அணுகி, ஆய்ந்து, தீர்ப்புரை வழங்கும்நிலை குடிமக்களுக்கு வேண்டும்.

இந்தப் பண்பாடுகள் தென்னகத்தில் உண்டா, எனில், உண்டு; டாக்டர் அம்பேத்கார், அண்மையிலே வெளியிட்ட, 'மொழிவழி நாடுகள் பற்றிய எண்ணங்கள்' ('Thoughts on linguistic States') எனும் சிறு நூலில், 'North versus South' எனும் அத்தியாயத்தில் குறிப்பிடுகிறார்—

"தென்னாடு எப்போதுமே முற்போக்கானது; வடநாடு, பிற்போக்கான பகுதி! தென்னகம், கல்வித்துறையிலே முன்னேறிய பகுதி-வடநாடு அத்துறையிலே பின்தங்கி விட்ட பரப்பாகும்! தென்னாடு, அறிவுத்துறை நிரம்பிய நாடு—வடநாடு மூடப்பழக்கங்களின் கூடாரமாகும்,"—என்று!

ஆகையினாலே, இந்தியத் துணைக்கண்டத்தில், காங்கிரஸ் ஆட்சியிலே ஜனநாயகம் மலரவில்லை என்பதை நாம் உணருகிறோம். இந்தியா, முற்போக்கான—வளமான எண்ணங்களைக் கொண்ட ஜனநாயகம் வளருவதற்கேற்ற தட்ப—வெட்ப நிலைமைகளைக் கொண்ட தென்னாட்டையும், அதற்கு முற்றிலும்

(3-ம் பக்கம் பார்க்க)

தமிழர்களுக்கு அநீதி விளைவிக்கப்படுகிறது!

இலங்கை அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும்?

கொழும்பு, ஜுன் 14—

இலங்கையில் அம்பாராய் என்னும் இடத்தில் ஏற்பட்ட கலவரத்தின் காரணமாகப் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், அதனால் இருவர் குண்டுக்கு இரையாகி உயிர் துறந்தனர் என்றும் தெரியவருகிறது.

சிங்கள மொழி மாத்திரந்தான் அரசாங்க மொழியாகும் என்று முடிவு செய்ததின் விளைவாகவே இக்கலவரங்கள் இலங்கையில் நடைபெறுவதும், இலங்கை வாழ் தமிழர்களுக்குச் சிங்களவர்கள் பெரும் தொல்லைகள் கொடுத்துவருவதும் வாசகர்கள் உணர்ந்ததே!

இப்போது கலவரங்கள் வளர்ந்துகொண்டே போகின்றன. கொழும்புவுக்கு 50 மைல் தூரத்தில் உள்ள ரத்னபுரத்தில் தமிழர்களின் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன, என்று தெரிகிறது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தமிழர்களுக்கு அநீதி விளைவிக்கப்படுகிறது.

சிங்களவர் செய்யும் காலித்தனத்தை நிறுத்த இலங்கை அரசாங்கம் தடுக்கத் தக்க நடவடிக்கைகள் எடுக்கின்றனவா என்பது கேள்விக்குரியதே!

பம்பாயிலுள்ள ஜின்னாவின் வீடு

இந்திய அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளும்

கராச்சி ஜுன் 14—

இந்திய அரசாங்கம், பம்பாய் நகரத்திலுள்ள காலஞ் சென்ற முகம்மது அலி ஜின்னா அவர்களின் வீட்டை விற்க விரும்பவில்லை என்றும், அதை இந்திய அரசாங்கமே சொந்தத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறது என்றும் பாகிஸ்தான் அரசாங்கம் அறிவித்தது.

சென்ற ஆண்டு மார்ச்சு மாதத்தில் அந்த வீட்டை இந்திய அரசாங்கம் ஏலம் போட்டு விற்றுவிடுவது என்று விரும்பிய ஒன்றும், காலஞ் சென்ற ஜின்னா அவர்களின் நினைவுச் சின்னமாக விளங்குகின்ற அந்த வீட்டை பாகிஸ்தான் அரசாங்கம் வாங்க முடிவு செய்தது என்றும், அதன்படி அவ்வீட்டை வாங்குவதற்கு இந்திய அரசாங்கத்திடம் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றது என்றும், ஆனால் இப்போது இந்திய அரசாங்கம் அவ்வீட்டை விற்க விரும்பவில்லை—தன் சொந்த அலுவல்களுக்குப் பயன்படுத்திக்கொள்ள விரும்புவதாக அறிவித்துவிட்டது என்றும் அவ்வறிக்கை கூறுகிறது.

அந்த வீட்டில் இப்போது பம்பாயில் உள்ள பிரிட்டிஷ் துணைத் தூதுவர் தங்கியுள்ளார்.

வடநாட்டிலுள்ள சில செய்தித் தாள்கள்

வெளிநாட்டுக் கூலிகளாக வேலை செய்கின்றனவாம்!

ரோட்டாக், ஜுன் 14—

"சில செய்தித் தாள்கள்—குறிப்பாக டில்லியிலும், பஞ்சாபிலும் உள்ள செய்தித் தாள்கள் நாட்டில்குழப்பத்தையும்தகராறையும் உண்டாக்கி வருகின்றன; அப்பத்திரிகைகளுக்கு வெளிநாட்டினர் பொருள் உதவி செய்கின்றனர். இச்செய்தி எனக்கு நன்கு தெரியும்,"

என்று பிரதமர் நேரு இங்கு கூறியுள்ளார்.

"இந்திய நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை சில வெளிநாட்டினருக்குப் பிடிக்காத காரணத்தால் இந்தியாவில் குழப்பமும் கலவரமும் உண்டாக்க வேண்டும் என்பதற்காகவே அவர்கள் இப்படி செய்கிறார்கள்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

****

வருமுன் காப்போம்!

****

தமிழ்ப்பித்தன்

இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு வகையான கிளர்ச்சி ஏற்பட்டு வருகிறது.

பம்பாய்க் கிளர்ச்சியை நாடறியும்; அகாலிகளின் கிளர்ச்சியும் அப்படியே! இதே நேரத்திலேயே நாகர்களுடைய கிளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது; தமிழகத்திலும் கிளர்ச்சிகள் ஏற்பட்டுவருகின்றன; ஆனால், ஏனைய மாகாணங்களில் ஏற்படுகிற கிளர்ச்சிகளுக்கு இந்திய அரசியலார் செவிசாய்ப்பதுபோல் சென்னை மாகாணத்தில் — குறிப்பாகத் தமிழ் நாட்டில் ஏற்படுகிற கிளர்ச்சிக்குச் செவிசாய்ப்பது இல்லை.

'பம்பாய்க் கிளர்ச்சியா? பரிகாரம் தேடுவோம்' என்று புறப்படுகிற அரசியலார் — 'நாகர்களுடன்கூட உடன்பாடு செய்து கொள்வோமா?' என்று எண்ணுகிற அரசியலார்—அகாலித் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த எண்ணும் அரசியலார் தமிழ் நாட்டுத் தலைவர்களைப் பற்றி எண்ண மறுப்பதேன்?

கேரளத்தைக்கூட இந்திய அரசியலார் கவனிக்கின்றனர். ஆந்திரத்தை—அங்கு ஏற்பட்ட ஆந்திரத்தைக் கண்கூடாகக் கண்டனர். பொட்டி சிராமுலு செய்த கிளர்ச்சிக்கு மதிப்பளித்தனர்; ஆனால், தமிழகத்தின் கோரிக்கைகளை — கிளர்ச்சிகளைப் புறக்கணிக்கின்றனர்.

தமிழகத்து அமைச்சர்கள், பிரதிநிதிகள், நம்முடையபிரச்சினைகளை இந்திய அரசியலாருக்குப் படும்படியோ, அல்லது தமிழகத்தைக் கண்டு இந்திய அரசியலார் பயப்படும்படியோ சொல்வதில்லை. அதனால்,தமிழகத்தில் உள்ளவர்கள் 'ஏமாளிகள்' என்ற எண்ணம் இந்திய அரசியலாருக்கு ஏற்பட்டிருக்கிறது. இல்லாவிடில், கலகம் செய்பவர்களுக்கு உடனே நியாயம் வழங்கும் இந்திய அரசியலார், நீதிவழி சென்று, நேர்மைவழி நின்று கிளர்ச்சியோ, அறப்போரோ செய்யும் தமிழ் மக்களைப் புறக் கணிப்பதேன்?

தமிழ் மக்கள் வாழ்ந்தவிதம், அரசோச்சிய அருமை பெருமை —இந்திய அரசியலின் தலைமைப் பீடத்திலே இருப்பவர்களுக்குத் தெரியாததல்ல; தெரிந்தும்,நாம் புறக்கணிக்கப்படுகிறோம் என்றால், நம்மைப்பற்றி நமமவர்கள் சரியாகச்சொல்லுவதில்லை என்பதுதான் பொருள்! நம் பிரதிநிதிகள் பொம்மைகளாக இருக்கிறார்கள் என்பதுதான் பொருள்! நம் மாநிலத்து அமைச்சர்கள் 'மக்காக' இருக்கிறார்கள் என்பதுதான் பொருள்!

தரணியெல்லாம் ஒரு காலம் ஆண்டோம்! இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் ஒரு காலத்தில் நாம அரசு புரிந்தோம்! இன்று நம் நாட்டையாவது அரசு செய்வோம்! அதிக ஆசை வேண்டாம்—நம் நாடு நமக்குக் கிடைத்தால் போதும்! அந்த அளவுக்குக்கூட நமது அமைச்சர்கள் பணிபுரிய மறுக்கிறார்களே! அவர்களது உள்ளத்தில் 'தமிழ் நாடு தான் நம் நாடு' என்ற எண்ணம் மடிந்து போய்விட்டதோ என்று எண்ணும்போது உண்மையிலேயே வருத்தம்தான் ஏற்படுகிறது. நாட்டு மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதோடு, நாடாளும் அமைச்சர் குழாத்துக்கும் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவேண்டிய நிலையில் இருக்கிறோம், நாம்!

நாடாளும் அமைச்சர்களும், நாடு காக்கச் செல்லும் பிரதிநிதிகளும் நம்மைப்பற்றி—நம் நாட்டைப்பற்றி நல்ல முறையில் தெரிந்துகொண்டு, அடிமைப்பீடத்தில் அமர்ந்திருப்பதை ஒழிக்க அரும்பாடுபட்டால் நம் நாட்டை விரைவில் நாம் அடையமுடியும்.

இனிமேலாவது நம் மக்கள் நல்ல பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பார்களாக!

ஒரு சீப்பின் விலை ரூ. 4—8—0!

பம்பாய், ஜுன் 12—

"இந்தியத் தொழிலாளர்கள் வாங்கும் கூலியைப்போல் 5-லிருந்து 7 மடங்கு வரையில் அதிகமானகூலி ரஷ்யத் தொழிலாளர்கள் வாங்கினாலும்—மருத்துவ வசதி, கல்வி வசதி முதலிய வசதிகளை அவர்கள் இலவசமாகப் பெற்றாலும், வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைப்படுகின்ற உணவுப் பொருள்கள் முதலிய எல்லாப் பொருள்களின் விலையும் மிக அதிகமாக இருப்பதால், ரஷ்யாவில் உள்ள ஒரு தொழிலாளி தன் வருமானத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்த முடியாதாம்!

குடும்பம் செவ்வனே நடைபெற வேண்டுமாயின், அத்தொழிலாளியின் மனைவியும் ஒரு தொழில் புரிந்தே தீர்தல் வேண்டுமாம்!

ரஷ்யாவில் பொருள்களின் விலை இந்தியாவில் உள்ளதைப்போல் 30 மடங்குக்குமேல் அதிக விலையாக இருக்கின்றனவாம்; ஒரு சீப்பு வாங்குவதற்கு ரூ 4–8–0 தேவைப்படுகிறதாம்! ஒரு ஜதை செருப்பின் விலை ரூ. 200-ஆம்!

இந்தத் தகவல்களை சோவியத் ரஷ்யாவில் மே தின வைபவங்களைப் பார்த்துவிட்டு அண்மையில் இந்தியா திரும்பிய இந்து மஜ்தூர் சபைத் தலைவர் திரு. ஜே. என். மித்ரா என்பவர் அறிவித்தார்.

விசித்திர நிபந்தனை!

'வாழ்க்கைத் துணைவர்களைத் தேடும் பெண்கள் வேலைக்கு மனுச் செய்து கொள்ளவேண்டாம்' என்று அமெரிக்க அரசியலார் ஒரு விளம்பரம் வெளியிட்டுள்ளார்கள்.

'டைப்பிஸ்டு'களுக்கும், செயலாளர்களுக்கும் 265 பெண்கள் தேவையுள்ளதாம்!

பொறுப்புள்ள—மகிழ்ச்சிகரமான —வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் நல்ல உத்தியோகத்திற்குத் தாங்கள் பெண்களை விரும்புவதாக, அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

மாநிலப் புனரமைப்பு வேலைத் தொடக்கம்

கைதிகள் பரிவர்த்தனை

கோவை, ஜுன் 14—

மாநிலங்களைத் திருத்தியமைக்கும் நடவடிக்கைகளின் முதல் வேலையாக இப்போது சிறைச்சாலையில் உள்ள கைதிகள் தம் விருப்பம்போல் அவரவர் மாநிலத்திற்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

கோவை மத்திய சிறைச்சாலையில் இருந்த மலபாரைச் சேர்ந்த 100-க்கு மேற்பட்ட கைதிகள் கேரள மத்திய சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர். அதேபோன்று மலபாரில் உள்ள தமிழ் நாட்டுக் கைதிகள் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறைச்சாலைகளுக்குக் கொண்டுவரப் படுகின்றனர்

சீர்காழிக்கு அருகில் இயற்கை வாயு

சீர்காழி, ஜுன் 12—

பூமியிலிருந்து இயற்கையாக வாயு வெளிவருவதாகச் சொல்லப் படுகின்ற கெப்பத்தூர் என்ற கிராமத்தைத் தஞ்சை மாவட்ட கலெக்டர் வி. கார்த்திகேயன் என்பவரும், மற்றும் பல அதிகாரிகளும் சென்று பார்வையிட்டனர்.

இவ்வாயு பற்றி மேலும் அறிந்[illegible] கொள்வதற்குத் தேவையா[illegible] யைத் தனக்கும் இயந்[illegible] திய அரசாங்கத்தால் செய்[illegible] விருந்து கிடைக்கும்படி [illegible] படும். கெப்பத்தூர் சீர்கா[illegible] அருகிலுள்ள ஒரு கிராமமாகும்.

நிலைமைகளை மட்டும் கவனிப்பார்களாம்!

லண்டன், ஜுன் 18—

'கோவாவின் மோச நிலைமையைத் தவிர்ப்பதற்கு, இந்தியாவுக்கும்—போர்ச்சுகலுக்கும் சமாதான அவசியத்தை பிரிட்டிஷார் மீண்டும் வற்புறுத்தக்கூடாதா?' என்று காமன்சில் தொழிற்கட்சி உறுப்பினர் கேட்டகேள்விக்கு துணை காமன்வெல்த் அமைச்சர் கூறியதாவது:—

"அவ்வாறு செய்ய இயலாது; ஆனால், பிரிட்டிஷ் அரசினர் நிலைமைகளை மட்டும் கவனித்துக் கொண்டிருப்பர். இரு சர்க்கார்களுடனும் பிரிட்டிஷ் சர்க்கார் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கும்"

நாடாளும் நேருவின் விபரீதப் பேச்சு!

மொழிக்குப் போராடுவோர் வெளிநாட்டவரின் கைக்கூலிகளாம்!

ரோட்டாக், ஜுன் 14—

மொழியின் பெயரால் சிலர் நாட்டைச் சிதைக்க விரும்புகிறார்களாம்!

அவர்களைக் குறித்து மக்கள் விழிப்புணர்ச்சியோடு இருத்தல் வேண்டுமாம்!

இந்தியாவைப் பலவீனப்படுத்த விரும்பும்சிலவெளிநாட்டினரின் விருப்பத்தை நிறைவேற்றவே அவர்கள் இங்ஙனம் செய்கின்றனராம்!

இங்கு நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் நேரு இந்த அபத்த மொழிகளை வெளியிட்டுள்ளார்.

அதுவும் வடக்கில்தான்

முதல் மின்சாரத் தாமிர சுத்திகரிப்புத் தொழிற்சாலை

கல்கத்தாவில் துவக்கப்படுமாம்!

கல்கத்தா, ஜுன் 14—

இந்தியாவின் முதல் மின்சார தாமிர சுத்திகரிப்புத் தொழிற்சாலையொன்று கல்கத்தாவில் துவக்கப்படும் எனத் தெரிகிறது. ஏற்கனவே கல்கத்தாவில் வெள்ளி சுத்திகரிப்புத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகிறது. நிறுவவுள்ள தாமிர சுத்திகரிப்புத் தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு 1,500 டன் தாமிரம் உற்பத்திக்கு இயந்திரசாலை அமைக்கப்படுமாம். இதற்கு ஆண்டிற்கு 6,000 டன் தாமிரக் கழிவுகள் வேண்டியிருக்குமாம்.

மகாராஷ்டிரர்களைக் காங்கிரஸ் மேலிடம் மிரட்டுகிறது!

'காங்கிரசின் முடிவுக்கு கட்டுப்படு; இல்லையேல் வெளியேறு'

பம்பாயின் வருங்கால முடிவு மாற்றப்படமாட்டாதாம்

பம்பாய், ஜூன், 14—

'காங்கிரசின் முடிவுக்குக் கட்டுப்படுங்கள்; இல்லையேல் காங்கிரசைவிட்டு வெளியேறுங்கள்' என்று கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள மகாராஷ்டிர காங்கிரஸ்காரர்களிடம் அறிவிப்பதுதான் முறை என்று காங்கிரஸ் மேலிடம் தீர்மானித்துவிட்டது எனத் தெரிகிறது.

பம்பாயில் அண்மையில் நடைபெற்ற அ. இ. கா. கமிட்டிக் கூட்டத்தில், 'பம்பாய் நகரத்தின் வருங்காலம் 5 ஆண்டுகளுக்குப் பிறகு ஜனநாயக முறையில் தீர்மானிக்கப்படும்; அதுவரையில், அது மத்திய அரசாங்கத்தின் நேரிடையான நிர்வாகத்தின் கீழ் இருந்துவரும்' என்று, பிரதமர் நேரு அறிவித்தது நினைவிருக்கலாம்.

ஆனால், மகாராஷ்டிரத்திலுள்ள காங்கிரசுக்காரர்கள் பம்பாய் நகரம் மகாராஷ்டிரத்தோடுதான் இணைய வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வருவதும் தெரிந்ததே!

மகாராஷ்டிரக் காங்கிரஸ்காரர்களுக்கு, 'தேசியத் தலைவர்களின் முடிவுகளுக்கு மதிப்பளியுங்கள்; இல்லையேல், பெருந்தன்மையோடும் நல்லெண்ணத்தோடும் காங்கிரசைவிட்டு வெளியேறிவிடுங்கள்' என்று, அறிவித்துள்ளதாகச் சொல்லப்படுகிறது.

"காங்கிரசில் ஒழுங்கீனமும், சச்சரவுகளும் இருப்பதை என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது; அவை, தேசிய நிறுவனமாகிய காங்கிரசை உருக்குலைத்துவிடும். மகாராஷ்டிரக் காங்கிரஸ்காரர்கள் மொழியின் அடிப்படையில் செய்த கிளர்ச்சியானது பெரும் கலவரத்தை புண்டாக்கிவிட்டது. அதனால் மகாராஷ்டிரக் காங்கிரசின் தலைமை, நாட்டிற்கு அவமானத்தை உண்டாக்கிவிட்டது,"

என்று, பிரதமர் நேரு மகாராஷ்டிரக் காங்கிரஸ் தலைவர்களிடம் கூறியதாகச் சொல்லப்படுகிறது.

பம்பாயில் நடைபெற்ற துர்ப்பாக்கியமான நிகழ்ச்சிகளுக்குப் பிராயச்சித்தம் செய்யும் முறையில் மகாராஷ்டிரக் காங்கிரஸ் தலைவர்கள் குறைந்தது 5 ஆண்டுக் காலம் அமைதியாக இருக்க வேண்டுமென்று காங்கிரஸ் மேலிடம் கூறியுள்ளதாகத் தெரிகிறது.

அமைதியான முறையில், சம்பந்தப்பட்ட பிரச்சினையில் முடிவு காணக் காங்கிரஸ் மேலிடம் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

காங்கிரஸ் மேலிடம் இப்போது பம்பாயின் வருங்காலம் பற்றிச் செய்துள்ள முடிவை மாற்றிக் கொள்ளப் போவதில்லையென்றும், அடுத்துவரும் பொதுத் தேர்தலில் காங்கிரசு வெற்றி அடைவதற்கான வகையில் போட்டியிட்டுப் பார்த்துவிடுவது என்றும் காங்கிரஸ் மேலிடம் முடிவு செய்துள்ளதாகவும் தெரியவருகிறது.

மக்களாட்சி......

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மாறுபட்ட வடநாட்டையும், இயற்கைக்கு முரண்பட்ட நிலையில் பிணைத்திருக்கிறது. அந்தப் பிணைப்பு, உருவானதல்ல — உருவாக்கப்பட்டது! விருப்பத்தின் விளைவல்ல அந்த இணைப்பு— ஆதிபத்திய வெறி பிடித்தோரின் தேவையின் விளைவு! எனவே, ஜனநாயகப் பண்பாட்டைப் பேணி வளர்க்கும், திராவிட முன்னேற்றக் கழகம், தென்னாட்டை— நம்மவரின் பொன்னாட்டை— நம் முன்னையோர்தம் நல்வீட்டைத் திருப்பிப் பெற முயற்சிப்பதிலே யார் என்ன குறை காணக்கூடும்?

ஜனநாயகம் மலர—திராவிடக் குடியரசைக் காண்போம்! இந்த சூளுரை, நமது இதய கீதமாக—உரிமைக் குரலாக ஒலிக்கட்டும்!

இயக்கப் பணி

கோ. வெற்றிவீரன்

நாம், நாட்டிலுள்ள பல்வேறு பிரச்சினைகளையும் ஆராய முனைகிறோம். 'இது ஏன்? எப்படி? எங்கே? என்ன ஆதாரம்?'—என்பன போன்ற வினாக்கள், நமது பகுத்தறிவு என்னும் கணையிலிருந்து பிரிந்து, பல முனை சென்று, பழமையைச் சாடி, பாதகம் புரிவோரைத் தாக்கி, சூழ்ச்சியினைத் தகர்த்து, கேடு நினைப் போரை — கெடுமதியாளர்களை கருவறுத்து வாகை சூடுகிறது!

பகுத்தறிவை ஆயுதமாகக் கொண்ட நமது கேள்விக் கணைகள் எதிலும் எங்கும் நிலவிடும் காற்றைப் போன்று எல்லாவற்றையும் ஊடுருவும் வன்மை பெற்றனவாகும்.

"நம்மில் சிலரை சூத்திர மொழிப் பேசி ஜாதி பேதம் காட்டி வேறு பிரிப்பதேன்? இனத்தால், மொழியால், பண்பால் ஒன்றானவர்களை சேரியிலே ஒதுக்கித் தள்ளுதல் நீதியா?

"கருத்தொருமித்த காதலர்களை ஜாதிபேதம் காட்டி வேறு பிரித்து —கலப்பு மணத்திற்கு சாவு மணியடித்து, இரு முனைகளை ஒன்றாக்கு காட்டிப்போல் விருப்பமில்லா ஒருவருடி நட—ஒருத்திக்கும் 'விவாகம்' விருப்பற்றுவைப்பது நியாயமா?

டது நம்மிடையே குறளும், சிலம்பும், அகமும் புறமும், எட்டும் பத்தும், இன்ன பிற இலக்கியங்களும் தமிழ் மணம் கமழ்ந்து நன்னெறி புகட்டும்போது, தமிழர்களை குரங்குகளெனவும், ஆரிய இராமனை அவதாரப் புருடனாகவும் ஏற்றிப் போற்றி எழுதிவைத்த இராமாயணமும், ஐவருக்கும் ஒருத்தி— அவளே பத்தினி எனப் பகரும் பாரதமும் ஏன்?

"மாடமாளிகை உருவாக்கியவன் மண் குடிசையில் வாழ்வதா? உயர்ந்த நெல்மணிகளை உற்பத்திச் செய்து தந்தவன், உப்பில்லாச் சோளக்கூழ் குடிப்பதா? சோம்பேறிகளின் இன்ப வாழ்விற்கு, தன் உடலம் உருக்குலைய உழைத்தவன் எலும்புந் தோலுமாகி நலிந்து, வறுமையோடு போராடுவதா? ஏன் இந்த அவலநிலை? இந்நிலையினை துடைத்தெறிய நாடாள வந்தோரே, நீவிர் செய்த நற்காரியந்தான் என்ன?

"திராவிடம் தனித்து இயங்கி உலக நாடுகளின் ஒப்பற்ற உயர்ந்த மதிப்பைப் பெற்று, கலை வளர்த்து முத்தமிழை ஓம்பி, இந்நாட்டின் பண்பாட்டை பாரறியச் செய்து தன் புகழ் பரப்பி வந்ததே—அந்தப் பொன்னுடா, இன்று, வடவருக்குத் தான் பணிந்து—தாழ் நிலையுற்று—வளமெலாமிழந்து, சீர்குலைவதா?

"வடவருக்குச் சோடி பிடிக்கும் கோமாளிகளாய் — பாதந்தாங்கும் தாசானுதாசர்களாய் வாழ்வதா? இந்த இழிநிலையைப் போக்க வேண்டாமா?

"ஏக இந்திய உபதேசம் புரியும் காங்கிரசுத் தோழர்களே, இந்தியச் சரித்திரத்திலே வெள்ளைக்காரனுக்கு முன்பு இந்தியா, ஒரே நாடாக இருந்ததுண்டா?

"தீவு பல வென்றடிப்படுத்தி, வெற்றி முரசு கொட்டி திராவிடம் கோலோச்சிய நாளில், கிரேக்கர்கள்—யவனர்கள் இந்நாட்டில் வந்து காவல் புரிந்துப் பிழைத்துப் போயினரே, அத்தகு பெருமைப் பெற்ற இந்நாட்டுச் சொந்தக்காரர்கள் இலங்கையிலே, மலேயாவிலே, தென்னாப்பிரிக்காவிலே கூலிகளாய்—அனாதையராய் வாழ்கின்றார்களே! சென்னை மாநில சர்க்காரே, நம் தமிழர்களுக்கு நீங்கள் செய்த உதவிதான் என்ன?

"வள்ளுவரும் மற்றும் எண்ணிலடங்கா புலவர் பெருமக்களும் போற்றிவளர்த்த இன்பத்தமிழின் உயிரைக் குடிக்கவரும் இந்தி ஏன்? தமிழ் போன்ற தொன்மையும், இலக்கியச் செல்வங்களும், பொருளாழமும் சொற்சுவையும் இந்திக்கு உண்டா? தமிழ்காக்க தாளமுத்து —நடராசனை பலி கொடுத்தோரே எங்கே உங்கள் வீரம்? ஆட்சியிலுள்ள ஆணவப் போக்கினர் திணித்திடும் இந்தியை ஏற்பதா? மொழிகாக்க முன்வர மாட்டீரா?

"தமிழ் நாட்டிற்குத் 'தமிழ்நாடு' எனப் பெயரை மாற்றாது, 'மதறாஸ் ராஜ்யம்' எனத் துணிந்து கூறும் தமிழ்த்துரோகிகளே! மற்ற மாநில சர்க்கார்கள், தங்கள் மாநில 'எழிலுணர்வு'க்குப் போராடும் தன்மை கண்டுமா, உங்கட்கு வெட்கம் பிறக்கவில்லை? நீங்களும் தமிழர்கள்தானா?"

இவ்வாறெல்லாம் நாம் விடுக்கும் வினாக்கள்—தொடுக்கும் சரங்கள் மாற்றாரை திகைக்கவைத்தன. ஆண்டவன் அவதாரம் முதற்கொண்டு ஐந்தாண்டுத் திட்ட அக்கிரமம்வரை—நமது பகுத்தறிவுக் கணையிலிருந்து பிறக்கும் வினாக்கள் எதிர்தரப்பினரைத் திணறவைத்து, திக்குமுக்காடச் செய்கின்றன. இவ்வளவிற்கும் நமது ஆயுதம் பகுத்தறிவு ஒன்றே! அதைக்கொண்டே நாம் எல்லாப் பிரச்சினைகளையும் காய்தலுவத்தலின்றி அலசி ஆராய்கிறோம். கணை ஒன்றுதான்—பகுத்தறிவு! முனைகள்—பலப்பல! அதைக்கொண்டே நாம் இயக்கப் பணியாற்றுகிறோம்.

சின்னமனூருக்கு அண்ணா வருகை

★

18—6—56 மாலை 6-30 மணியளவில், சின்னமனூர் இளங்கோ படிப்பக 3-ம் ஆண்டு விழா, சங்கிலி செட்டியார் திடலில், தோழர் நா. குமாரசாமி தலைமையில் நடைபெறும்.

அண்ணா அவர்கள் விழாவில் கலந்துகொண்டு விரிவுரையாற்றுவார்.

கழகக் கூட்டம்

★

துரிஞ்சிப்பட்டி :
(பொம்மிடி)
ஊராட்சி பொதுத் திடலில்
17—6—56 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
என். வி. நடராசன்
அருண்மொழி

★

கடலூர் :
மஞ்சைநகர் மைதானத்தில்
17—6—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
வாணிதாசன்
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
சி. பி. சிற்றரசு
ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.

★

குன்னத்தூர்:
தேர்த் திடலில்
17—6—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
கு. க. சுப்பிரமணியம்
பேசுவோர்:
சிற்றுளி-சுப்பிரமணியம்
எஸ். அப்பாவு

★

பெரும்பண்ணையூர் :
18—6—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
சி. கிருட்டிணமூர்த்தி
பேசுபவர் :
கி. மனோகரன்

★

கோலார் தங்கவயல்:
உயர்நிலைப்பள்ளித் திடலில்
19—6—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
மா. நெடுஞ்சேரலாதன்
பேசுபவர் :
என். வி. நடராசன்

★

திருவெண்காடு :
கீழ வீதியில
19—6—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
எம். குசலவன்
பேசுவோர்:
கி. மனோகரன்
என். கிட்டப்பா

சோஷலிஸ்டு கட்சி ஆர்ப்பாட்டம்

★

உணவுப் பண்டங்களின் விலை ஏற்றம் குறித்து கவலையற்றிருக்கும் அரசாங்கத்தின் போக்கைக் கண்டிக்கவும், சென்னை நகரசபையின் சைக்கிள் வரி குறைப்பை ஒப்ப மறுத்த அரசாங்கத்தின் செயலைக் கண்டிக்கவும், தமிழ்நாடு சோஷலிஸ்டு கட்சி இத்திங்கள் 17, 18 ஆகிய இரண்டு நாட்களிலும் நாடு முழுதும் அமைதியான ஆர்ப்பாட்டம் செய்ய முடிவுகட்டி இருக்கிறது.

அவ்வகையில், சென்னை தான்ஸ்மித் நகரிலிருந்து, தோழர் எஸ். சி.சி. அந்தோனி (பிள்ளை) எம். எல். ஏ., தலைமையில், 17—6—56 காலை 8 மணிக்கு ஒரு சைக்கிள் ஊர்வலம் கிளம்பும். அவ்வூர்வலத்தில் சைக்கிள் வைத்திருப்பவர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.

அன்று மாலை 6 மணி அளவில் பெரம்பூர் ஏரியில், தோழர் எஸ். பக்கிரிசாமி (பிள்ளை) எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில், ஓர் கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெறும்.

விக்கிரசிங்கபுரத்தில் பொதுக்கூட்டம்

17—6—56 மாலை 6 மணியளவில், பாரதிதாசன் படிப்பகச் சார்பில், சுப்பிரமணியசாமி கோயில் முன்னிலையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் நா. ரகீம் தலைமையில், மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் எஸ். முத்து, தோழர் எஸ். கந்தசாமி ஆகியோர் மாநில மாநாட்டின் முடிவுகள் குறித்து விரிவுரையாற்றுவர்.

'தீச்சுடர்' நிதிக்காக சிறப்புச் சொற்பொழிவு

திருப்பத்தூர் நியூ சினிமாவில்
17—6—56 காலை 9 மணிக்கு
தலைவர் :
முல்லை-சத்தி
பேசுவோர்:
மு. கருணாநிதி
சி. பி. சிற்றரசு
கே. ஆர். இராமசாமி
நன்கொடை :—ரூ. 1; அணா 8
பெண்கள் : அணா 4.

—கடி. நெடுஞ்சோழன்,
அமைப்பாளர்

சொற்பயிற்சிக் கூட்டம்

17—6—56 காலை 10 மணியளவில், பெங்களூர்—அலசூர் முயற்சி மன்றச் சார்பில், 'இல்வாழ்க்கையும் பழமை எண்ணமும்' என்ற தலைப்பில், தோழர் வேலரசு தலைமையில், மன்றத் தோழர்கள் பலர் பேசுவர்.

திருமணங்கள்

17—6—56 காலை 9 மணியளவில், புதுவை பாக்கமுடையான் பேட்டையில் தோழர் கி சண்முகம் (அகமதாபாத்)—தோழியர் விஜயலட்சுமி திருமணம், புதுவை தி. மு. க. செயலாளர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறும் தோழர்கள் சி. பி. சிற்றரசு, செ. கோவிந்தராசன், கோ. பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

17—6—56 காலை 8 மணியளவில், குன்னத்தூர் என் ஆர் கருப்பண்ணன் (நாடார்) கல்வி நிலையத்தில், குன்னத்தூர் தி மு க செயலாளர் தோழர் என். டி. இராமசாமி—தோழியர் சானகி திருமணம் புலவர் ஆறுமுகம் தலைமையில் நடைபெறும். தோழர் எஸ். அப்பாவு வாழ்த்துரை வழங்குவார்.

* * *

17—6—56 காலை 9 மணியளவில், சென்னை — மயிலாப்பூர் தெற்கு மாடவீதி, எண். 27 இல்லத்தில், புலவர் நன்னன் தலைமையில், தோழர் பாலு—தோழியர் சரோசனி திருமணம் நடைபெறும். தோழர்கள் மா இளஞ்செழியன், கா. இளம்பரிதி, டி. வி. நாராயணசாமி, வ. சே. புகழேந்தி வாழ்த்துரை வழங்குவர்.

* * *

17—6—56 காலை 7 மணியளவில், சென்னை — பெரம்பூர் பாரக்ஸ், நியூபேரன்ஸ் வீதி எண் 38/1 இல்லத்தில், தோழர் இளம்பரிதி தலைமையில், தோழர் பி வேலாயுதம் — தோழியர் ஆ. தெய்வநாயகி திருமணம் நடைபெறும். தோழர்கள் சி பி சிற்றரசு, ஆர் டி. அரசு வாழ்த்துரை வழங்குவர்.

* * *

17—6—56 காலை 8-30 மணியளவில், சென்னை - செம்பியம் மேல்பட்டடை, எஸ் எஸ். வி கோவில் தெரு, 88/3-ம் எண் இல்லத்தில், திரு. கே. சாமுண்டீசுவரன், எம். சி, தலைமையில் தோழர் எம். ஜெகன்நாதன் — தோழியர் எஸ் மீனாம்பாள் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். தோழர்கள் ஏ கே வில்வம், எம். சொர்ணம், மதிமாறன் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

17—6—56 காலை 7 மணியளவில், சென்னையை அடுத்த கொடுங்கையூர் கிராமத்தில், தோழியர் அலுமேலு - அப்பாதுரை தலைமையில், தோழர் எம் தணிகாசலம் —தோழியர் பூசம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம் வி எஸ். கோவிந்தராசன், கே. எம். கண்ணபிரான் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

17—6—56 காலை 7 மணியளவில், சென்னை—மூலக்கொத்தளம் பி. சுப்பராயன் பாடசாலையில், கவிஞர் நீல துரைக்கண்ணன் தலைமையில், தோழர் எம். கே. கண்ணன்—தோழியர் எம். அரங்கநாயகி திருமணம் நடைபெறும். தோழர்கள் காஞ்சி - கல்யாணசுந்தரம், வளையாபதி முத்துக்கிருஷ்ணன், தி. போ போகேந்திரன், மு. மா. முத்து, வெ வ வேந்தன், ஜே. எஸ். இராசன் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

17—6—56 காலை 8 மணியளவில், சென்னை—எழும்பூர், சாமி செட்டி வீதி, 23-ம் எண் இல்லத்தில், தோழர் எம் முனுசாமி— தோழியர் சரசா ராணி வாழ்க்கை ஒப்பந்தம், தோழர் கி அருணன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சுரதா, மு மாசிலாமணி ஏ. கே. முத்தரசு வாழ்த்துரை வழங்குவர்.

* * *

18—6—56 காலை 9-மணியளவில், தஞ்சை பழைய மாரியம்மன் கோவில் ரோடு, 4327 எண்ணுள்ள இல்லத்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில், தோழியர் சிவபாக்கியம்—தோழர் இலக்குமணன் திருமணம் நடைபெறும்.

* * *

18—6—56 காலை 10 மணியளவில், விக்கிரமசிங்கபுரத்தில், மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். முத்து தலைமையில், தோழர் இலட்சுமணன்—தோழியர் விசயலட்சுமி வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். தோழர்கள் எஸ். கந்தசாமி, ஊராட்சி மன்றத் தலைவர் ஆர். வி. அனந்தகிருஷ்ணன வாழ்த்துரை வழங்குவர்.

தமிழ் நாடு வர்த்தகப் பிரச்சாரக் குழு

26—8—56-ல், சென்னையில் நடைபெறப்போகும் பலகட்ட முறை விற்பனைவரி எதிர்ப்பு 3-வது மாநில மாநாட்டின் இலட்சியங்களை, மேற்படி பிரச்சாரக் குழு, சென்னையில் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் விளக்கும் :—

ஜுன் 15: மாலை 5 மணி—வண்ணாரப்பேட்டை; 16: இரவு 7 பெரம்பூர்; 17: மாலை 5 புரசைவாக்கம்; 18: மாலை 6 மைலாப்பூர்; 19: இரவு 7 சிந்தாதிரிப்பேட்டை; 20: மாலை 4 சைதாப்பேட்டை; 21: மாலை 3 மூர்மார்க்கெட்டு; 22: மாலை 6 ஆயிரம் விளக்கு; 23: இரவு 7 கந்தசாமிகோயில்; 24: மாலை 5 திருவல்லிக்கேணி; 25: மாலை 5 ஆலந்தூர்; 26 மாலை 6 கொத்தவால்சாவடி; 29 மாலை 6 தியாகராயநகர்.

அனுதாப பொதுக்கூட்டம்

ஆண்டர்சன்பேட்டை தி. மு. கழகச் செயலாளர் தோழர். கே. ஜி சின்னராசன் அவர்கள் மறைந்ததை ஒட்டி 18—6—56ல் நந்தித் துருகம் வட்டாரத்தில் தோழர் ஏ. டி. பிரான்சீஸ் தலைமையில் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் சின்னராசனின் புகைப்படத்தைத் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றுவார்.

இராயபுரம் இலக்கிய மன்றம்

17—6—56 காலை 9-30 மணியளவில், பனைமரத்தொட்டி, அட்டபாளையம் பஜனைக் கோவிலில், திரு. ஆர். டி. சுந்தரராசன் தலைமையில், திருவாளர்கள் ம.பொ. கேசவராமன், ம. செல்வராசன். முறையே 'தமிழும்—வைணவமும்,' 'தமிழர் திருமணத்தில் தாலி' என்ற தலைப்புகளில் விரிவுரையாற்றுவர்.

காதணி—பெயர் சூட்டு விழா

17—6—56 காலை 8 மணியளவில், சென்னை—திருவொற்றியூர் அடுத்த மணலிகிராமம், கீழண்டை வீதி, எண் 2/87 இல்லத்தில், தோழர் எம். பாலன் செல்விகள் பி. ரமணி, பி. மஞ்சுளா, பி. தேன்மொழி ஆகியவர்களுக்கு காதணியும், இளைய குழந்தைக்கு பெயர் சூட்டு விழாவும் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெறும். தோழியர் சத்தியவாணி முத்து, தோழர்கள் பி. வரதராஜ், மு. மா. முத்து வாழ்த்துரை வழங்குவர்.

சூளை—நகர இளைஞர் கழகம்

17—6—55 காலை 8-30 மணியளவில் சுகாதார ஊர்வலம் ஒன்று திரு. ஆர்ட்டன் எச். ஈத் தலைமையில், கழக மனையிலிருந்து புறப்பட்டு, கல்யாண மேஸ்திரி தோட்டம், குமாரசாமிராஜாபுரம் ஆகிய சேரிகளுக்கு சென்று சுகாதாரப் பணியாற்றும்; இலவசமாகப் பால் வழங்கப்படும். பின்னர் கழக மனையில் (10, மாணிக்கச் செட்டித் தெருவு, சூளை) பொதுக்கூட்டம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.